1993 ஏப்ரல் 1]

முற்பகல் 10-40

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்ட்-2 ஸ்கீமிலாவது சேர்த்து இதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டூர், வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சிகளின் தற்போதைய மக்கள் தொகை முறையே 22,145, 18,504 ஆகும். கோட்டூர் பேரூராட்சியில் சுமார் 20 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வகையில் கோட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு நபருக்கு 45 லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெருகி வரும் மக்கள் தொகையை கணக்கிலே கொண்டு கோட்டூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1983-இல் 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டது. தற்போது நாள் ஒன்றுக்கு 1.68 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வேட்டைக்காரன் புதூருக்கு 1996-இல் எட்டப்படும் மக்கள் தொகையை கணக்கிலே கொண்டு 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 45 லிட்டர் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதை தற்போது கூடுதலாக்க கருத்துருக்கள் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கருத்திலே கொண்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 211, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வினா எண். 212, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

212—

விண்ணமங்கலம், பூதராயநல்லூர் ஊராட்சிகளை பூதலூர் ஒன்றியத்தோடு இணைக்கும் நடவடிக்கை.

*11349— திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விண்ணமங்கலம், பூதராயநல்லூர் ஆகிய ஊராட்சிகளை பூதலூர் ஒன்றியத்தோடு இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உள்ளாட்சி நிறுவனங்களில் எவ்வித நிர்வாக மாற்றங்களும் செய்யக்கூடாது என்று அரசின் தடை ஆணை அமலில் இருந்தது. இத்தடை ஆணை 18-3-1993-இல் விலக்கிக்கொள்ளப்பட்டது. எனவே, ஊராட்சித் தேர்தலுக்குப் பின்னர், ஊராட்சிகளின் ஒப்புதல் பெறப்பட்டு பரிசீலிக்க வேண்டி இருப்பதால், தற் சமயம் திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் விண்ணமங்கலம், பூதராயநல்லூர் ஆகிய ஊராட்சிகளை பூதலூர் ஒன்றியத்தோடு இணைப்பதற்கு சாத்தியம் இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் விண்ணமங்கலம், பூதராயநல்லூர் ஆகிய ஊராட்சிகள் திருவையாறு ஒன்றியத்தில் இருக்கின்ற ஊராட்சிகளாகும். திருக்காட்டுப்பள்ளி-பூதலூர் சாலைதான் இரண்டு ஒன்றியங்களுக்கு எல்லையாக இருக்கின்றது. திருக் காட்டுப்பள்ளிச் சாலைக்குக் கிழக்கே உள்ளது திருவையாறு ஒன்றி யமும் மேற்கே உள்ளது பூதலூர் ஒன்றியமும் ஆக இருக்கின்றது. விண்ணமங்கலமும் பூதராயநல்லூரும் பூதலூரும் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. திருவையாறு ஒன்றியத்தைச் சார்ந்ததாக பூதராயநல்லூர் இருக்கிறது. அது நிர்வாகத்திற்கு சௌகரியப் படாத ஒருநிலையில் இருக்கின்ற காரணத்தினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள் : பூதராயநல்லூர் ஊராட்சியை யும், விண்ணமங்கலம் ஊராட்சியையும் பூதலூர் ஒன்றியத்தில் சேர்த்துவிட்டு, கூத்தூர் ஊராட்சியையும் விட்டலாபுரம் ஊராட்சி யையும், திருவையாறு ஒன்றியத்தில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் களிடமிருந்து இதுபற்றி கருத்துரை அரசின் மூலம் பெறப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 213, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.